பரப்பும்போது, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க குறைந்த வாய்ப்புக்களையே ஏற்படுத்தும். நம் கர்த்தராகிய இயேசு சுவிசேஷத்தை, விசேஷமாக, ராஜ்யத்தோடு அடையாளப்படுத்தியே பேசினார் என்பதை நம் நினைவில்கொள்ளவேண்டும். ஆகவே நாம் நற்காரியங்களாகிய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவேண்டும். சபையை ஒன்றுசேர்க்கும் தேவனுடைய வழிமுறை இதுவாகவே இருந்துவருகிறது. இது உலகத்துக்கு சாட்சியாயிருக்கும். ராஜ்யத்தின் நற்செய்தியை அறிவிக்க நாம் இன்னும் வாய்ப்பு பெற்றிருக்கிறோம். இந்த சுவிசேஷத்தின் அடிப்படை, பாவிகளுக்காக பலியான கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மரணம் அவரது உயிர்த்தெழுதல் மற்றும் பரத்துக்கு ஏறி, பிதாவின் வலதுபாரிசத்தில் உட்கார்ந்ததாகும். அதன் மேற்கட்டுமானமானது, விரும்புகிற அனைவருக்கும் இரட்சிப்பு அளிப்பது – சபைக்கான இரட்சிப்பு, அடுத்து உலகத்துக்கான இரட்சிப்பு. இந்த தேவஆசீர்வாதங்கள் அனைத்தும் கிறிஸ்துவின் மூலமாகவே வருகின்றன.

சபைக்கும், உலகத்துக்குமான கர்த்தரது உன்னத ஆசீர்வாதங்கள் இயேசுவின் இரண்டாம் வருகையில் அளிக்கப்படும். அவ்வேளையில் சபை மகிமைப்படுத்தப்பட்டு, உயர்த்தப்படும். தேவன் வாக்களித்திருக்கிற அவரது ராஜ்யம் முழுமையாக ஸ்தாபிக்கப்பட்டு, அக்காலத்திற்கே உரிய ஆசீர்வாதங்கள் உலகின் ஜனங்களை வந்தடையும். ஆகவே, இந்த உண்மை சுவிசேஷத்தை யாரெல்லாம் புரிந்துகொண்டு, தான் அதை பிரசங்கிப்பதற்கே திருநிலைப்படுத்தப்பட்டிருக்கிறேன் என்று வாஞ்சையோடிருக்கிறார்களோ, அவர்கள் அதை பிரசங்கிக்க தடைஏற்படும்போது கவலைப்படவேண்டியது அவசியமாகிறது. அநேக வழிகளில் பிரசங்கிக்க சிலரால் முடியும். மற்றவர்களுக்கோ ஒவ்வொரு வழியிலும் பிரசங்கிக்கமுடியும். சிலருக்கோ மிகச்சில வழிகளில் மட்டுமே பிரசங்கிக்கமுடியும். ஆனால் ஏதாவது ஒரு வழியில் எல்லோரும் பிரசங்கிக்கமுடியும். எவ்வளவு அதிகமாய் இதைச்செய்கிறோமோ, அவ்வளவுக்கதிகமாய் மகிழ்ச்சியோடு இருக்கமுடியும். நம் நாட்களில் – புத்தகங்கள், வேதாகம அகராதிகள் என ஏராளமான உதவிகள் நமக்கு கிடைக்கின்றபடியால், தேவனுக்கு நாம் நன்றிசெலுத்துவோம். இவை அனைத்தையும் நன்கு உபயோகித்து, மற்றவர்களது நன்மைக்காகவும், நமது சொந்த ஆவிக்குரிய வளர்ச்சிக்காகவும் பிரயோஜனப்படுத்துவோமாக!

———————————————————

**R 5893**

# <u>உங்களைப் பகைக்கும் உங்கள் சகோதரர்</u>

# YOUR BRETHREN THAT HATED YOU

“என் நாமத்தினிமித்தம் உங்களைப் பகைத்து, உங்களை அப்புறப்படுத்துகிற உங்கள் சகோதரர்,
கர்த்தர் மகிமைப்படுவாராக என்கிறார்களே; அவர் உங்களுக்குச் சந்தோஷம் உண்டாகும்படி காணப்படுவார்;
அவர்களோ வெட்கப்படுவார்கள்” – ஏசாயா 66:5

தேவனுடைய வசனத்தின்செய்தி எவ்வளவு நேர்த்தியாகவும், புத்தியறிவுக்கு ஏற்புடையதாயும் உள்ளது! இயேசுவின் பின்னடியார்களில் அநேகர் விசுவாசத்தில் இளைஞராயிருந்து, பரிசுத்தஆவியை சிறிதளவே பெற்றிருந்து, தங்கள் விரோதிகளை பயமுறுத்தி, தேவன் பழிவாங்குவார் என அச்சமூட்டுகின்றனர். அப்போஸ்தலர்கள் யாக்கோபு மற்றும் யோவான் கூட, சமாரியப் பட்டணத்து ஜனங்கள், இயேசுவுக்கும் அவரது சீஷருக்கும் அப்பம் விற்க மறுத்தபடியால், அழித்துவிடும் என்றனர். ஆனால் இயேசு தம்மை மரணபரியந்தம் உபத்திரவப்படுத்தினவர்களைப் பார்த்தோ அல்லது அவரது பின்னடியார்கள் தங்களை உபத்திரவத்துக்கு உள்ளாக்கினவர்களைப் பார்த்து அச்சுறுத்தினதாகவோ வேதாகமத்தில் ஒரு வார்த்தையாகிலும் காணப்படவில்லை. “அவர்களோ வெட்கப்படுவார்கள்” என்பதே அவர்களுக்கு சொல்லப்பட்ட எளிமையான வார்த்தையாய் இருந்தது. தானியேல் தீர்க்கதரிசி மூலமாக கர்த்தர் பிரகடனம் பண்ணினார்;

“பூமியின் தூளிலே நித்திரைபண்ணுகிறவர்களாகிய அநேகர்... விழித்து எழுந்திருப்பார்கள்”. சிலர் பரிசுத்தவான்களாக மகிமையடைந்த சபையாக, ஆகாயமண்டலத்தின் ஒளியைப்போல பிரகாசிக்கிறவர்களாகவும், மற்றவர்களோ நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்குமாக அவமானமடையும்படி எழுந்திருப்பார்கள் – தானியேல் 12:2,3.

இங்கு வேதாகமத்தின் பொதுமொழிபெயர்ப்பு, மேற்கூறப்பட்ட வசனத்தில் இன்னும் ஒரு படி மேலாகச் சென்று, “நித்திய நிந்தைக்கும் , இகழ்ச்சிக்குமாக அவமானப்படும்படி எழுந்திருப்பார்கள்” என்று கூறுகிறது. ஆனால் இதே வசனப்பகுதி எபிரேயமொழியில், “நிந்தையும் இகழ்ச்சியும் நீடித்திருக்கும்” என்று கூறுகிறது. அதாவது, தீமைசெய்தவன் கர்த்தருக்கு எதிராகவும் அவரது செய்திக்கு எதிராகவும் எதுவரைக்கும் நிந்தைக்குட்பட்டிருக்கிறாரோ, அதுவரைக்கும் இந்த அவமானம் நீடித்திருக்கும். தனிப்பட்ட நபரது செயல்பாடுகள் இகழ்ச்சியுள்ளதாய் இருக்கும்வரை, அந்த இகழ்ச்சி நீடித்திருக்கும். ஆனால் மறுசீரமைப்பு விரைவில் ஏற்படும்வேளையில் நம் தேவனுடைய குணாதிசயத்தையும், அவரது அரசாங்கத்தின் கோட்பாடுகளையும் ஏற்று

அதில் பிரியப்படுபவர்கள், அந்த அரசாங்கத்தின் அறிவுரைகளைக் கற்று அதைப் புரிந்துகொள்ளுவதன் நிமித்தமாக, நிந்தையும் இகழ்ச்சியும் அகன்றுபோகும்.

ஆகவே, பிரியமான சகோதரரே! கிறிஸ்துவின் நாமத்தினிமித்தமாக துன்பப்பட்டோரால் மேசியாவின் ராஜ்யம் நிர்வகிக்கப்பட இருப்பதால், உபத்திரவங்களை பொறுமையோடும், மகிழ்ச்சியோடும் ஏற்றுக்கொள்ளுங்கள். மகிழ்ந்து களிகூருங்கள் என்று நம் கர்த்தர் இதைக்குறித்தே ஆலோசனை கூறினார். கர்த்தரின் நிமித்தமாகவும், சத்தியத்தினிமித்தமாகவும் துன்பம் அனுபவிப்பவர்களாக இருந்தால், அவையனைத்தும் நித்திய வெகுமதியை நிச்சயமாய்ப் பெற்றுத்தரும். நாம் முறையாக சத்தியத்தைப் பயிற்சி செய்வோமானால், தேவனுடைய நேசகுமாரனது குணாதிசயத்தின் சாயலை பெறுவோமானால் நித்திய ஆசீர்வாதங்களை அடைவோம்.

நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்களுடைய நாமங்களனைத்தும் பரலோகத்தில் எழுதப்பட்டிருக்கும் என்று நமக்கு உறுதியளிக்கப்பட்டிருக்கிறது

---

**என்ன அற்புதம்!**

பதிலளித்தார் என் ஜெபங்களுக்கு நிறைவாக
மகுடம் சூட்டினார் நான் படைத்த கிரியைக்கு
ஆசீர்வாதங்கள் நான் தீர்மானித்ததைவிட அதிகமே –
ஆசீர்வாதங்கள் மறைவாயில்லை,
உண்மையும், இலவசமுமாய்
நான் திகைத்து நின்றேன், இது சாத்தியமா என
காதோடு பேசினேன்
நான் தேடின எல்லா கொடைகளையும் அவர் அருளினார்
என்னே அற்புதம் ! அவர் எனக்கு பெற்றுத்தந்தது!
என்னே ஆச்சரியம்! அவர் எனக்கு பதிலளித்தது
ஓ அவிசுவாச இருதயமே! அவர் செவிமடுத்தேன் என்கிறார்
உன் எளிமையான ஜெபத்துக்கு
செவிகொடுத்தார், பதிலளித்தார்
வாக்குத்தத்தத்தை எண்பித்தார், இன்னும் பயப்படுகிறாயா ?
ஏன் ஆச்சரியம்! உன் கர்த்தர் தம்
வார்த்தையை நிறைவேற்றியதால் ?
நல்லவெற்றி உண்டாக்கும்
விசுவாசத்துக்கும் ஜெபத்துக்கும்
அவர்ஆசீரளிக்கவில்லையெனில்,
அது அதிக ஆச்சரியமே

---

**R 5896**

# எப்படி தீயோனின் இரகசிய சதித்திட்டங்களை முறியடிப்பது?

## MACHINATIONS OF THE EVIL ONE- HOW TO VANQUISH HIM



"சாத்தானை எதிர்த்துநில்லுங்கள்; அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்" – யாக்கோபு4:7

சாத்தான் என்ற வார்த்தை, தீயோனுக்கு அடையாளமாயிருந்து, அவன் அசுத்தநோக்கத்தோடு ஆதியில் தேவனுக்கு எதிராளியாக இருந்து, சர்வ வல்லவருக்கு எதிராக ஒரு போட்டி அரசாங்கத்தை ஏற்படுத்த முயற்சித்தான். இதனால் பரலோகத்திலிருந்து வெளியேற்றப்பட்டதோடு, எல்லா பரிசுத்த ஜீவிகளோடும் கொண்டிருந்த உறவிலிருந்து துண்டிக்கப்பட்டான். முன்பு லூசிபராக பிரகாசமாக்கப்பட்ட அவன்,